https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# தொல்காப்பியப் பூங்காவில் கலைஞரின் உரைத்திறன்

**முனைவர் த. சந்திரா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மேட்டூர்

## முன்னுரை

தமிழ்மொழியின் முழுமுதல் இலக்கண நூலாகத் தொல்காப்பியத்தை அறியமுடிகிறது. ஆயினும், தொல்காப்பியத்திற்கும் முன்னர் பல இலக்கிய, இலக்கண நூல்கள் இருந்தமைக்கான சான்றுகளைத் தொல்காப்பிய நூற்பாக்களின்வழி உணர்ந்து கொள்ளலாம். இறையனார் களவியல் உரையின் குறிப்புகள் வழியாக இடைச்சங்க நூலாக அறியப்படுகின்ற தொல்காப்பியம், பன்னெடுங்காலம் மூலபாடமாகப் பயிலப்பட்டு வந்தநிலையில் அதற்கு உரையெழுதும் மரபை இளம்பூரணர் தொடங்கி வைத்தார். கால வளர்ச்சியினால் மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் தொல்காப்பிய இலக்கணப் பாடத்தை வாசிப்பதற்கான இடைவெளியை உருவாக்கின. எனவே, அந்த இடைவெளியைக் குறைத்தல் பொருட்டு உரையாசிரியர்கள் உரை எழுதும் பணிகளை மேற்கொண்டனர். இளம்பூரணர் தொடங்கி நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் எனப் பழைய உரையாசிரியர்களும், பிற்காலத்தில் கல்வி மற்றும் ஆய்வியல் துறைசார்ந்த பல பேராசிரியர்களும் தொல்காப்பியத்திற்கு உரைகளை வகுத்துள்ளனர். அவ்வாறே, முத்தமிழறிஞராக இயல், இசை, நாடகத் துறைகளில் தனக்கென தனித்த அடையாளத்தைப் பெற்று 'கலைஞர்' என்னும் அடைமொழியுடன் அடையாளம் காணப்படுபவரும், தமிழ்மொழியின் மீதும், தமிழரின் வாழ்வியல் மீதும் அளப்பரிய அன்பு கொண்டதோடு இந்திய அரசியலில் தவிர்க்கவியலாத ஆளுமையாக இருந்தவரும், பன்முறை தமிழகத்தின் முதலமைச்சராக அமையப்பெற்றவருமான கலைஞர் மு.கருணாநிதி ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்திற்குத் 'தொல்காப்பியப் பூங்கா' என்னும் தலைப்பிட்டு உரை நூலொன்றை எழுதியுள்ளார். இந்நூலின்வழி கலைஞரின் உரைத்திறனை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## நூலின் உரைத் தன்மை

தமிழ் இலக்கிய வரலாற்றில் உரை மரபு தனித்துச் சுட்டத்தக்கதாகும். உரைகள் இல்லையெனில் பல இலக்கியங்களின் கருத்துகளை அறிந்துகொள்வதற்கு வாய்ப்புகள் இல்லாமல் போயிருக்கும். உரையின் சிறப்பு குறித்துக் குறிப்பிடும் இரா.இளங்குமரனார், "உரைகளாலேயே நாம் இழந்து போன தமிழ்ச் செல்வங்களின் பெயர்களையோ பகுதிகளையோ குறிப்புகளையோ அறிந்து கொள்ள முடிகின்றன" (இலக்கண உரையாசிரியர்கள் தொல்காப்பியம், ப.21) என்று குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களிலும் இடம்பெறக்கூடிய தெரிவுசெய்யப்பட்ட நூற்பாக்களுக்கு நூறு என்கின்ற அளவில் தலைப்புகளை வகுத்து உரை எழுதியுள்ளார் கலைஞர். இவ்வுரைப் பதிப்பு 2003ஆம் ஆண்டு முதற் பதிப்பாக வெளிவந்தது. இதனைப் பா.மதுகேசுவரனின் தொல்காப்பியப் பதிப்பு ஆவணம் (ப.71) என்னும் நூலின் வழியாக அறியலாம். பிற மரபார்ந்த

உரையாசிரியர்களிடமிருந்து இவ்வுரை முற்றிலும் வேறுபட்டதாக அமைந்துள்ளது. ஏனெனில், நூற்பாவும் நூற்பாவிற்கேற்ற விளக்கமும் என்று அல்லாமல், நாடக வடிவில் இருவருக்கு இடையேயான உரை யாடலாகவும், கவிதைத்துவமும் இவ்வுரையில் காணப்படுகிறது. தொல்காப்பிய உரை வரலாற்றில் இவ்வுரையைப் புதுமை என்றே குறிப்பிடலாம்.

கலைஞரின் இலக்கணப் புலமை குறித்து எடுத்துரைக்கும் மா.நன்னன், "இந்நூலாசிரிய ராகிய கலைஞர் கற்பிக்கும் முறையைக் கையாள்வதில் வல்லவர் என்பதற்குச் சான்றுகளாக உயிர், மெய் ஆகிய எழுத்துகளின் எண்ணிக்கையைக் கற்போர் உள்ளத்தில் பதிவிக்கக் கையாளும் பாங்கை யும், தமிழ் என்னும் சொல்லில் மெய்யெ ழுத்துகளின் மூவினமும் அடங்கியிருப்பதை எடுத்தியம்பும் பான்மையும், மானமில்லை, மாத்திரை போன்றவற்றைக் குட்டிக் கதைகளின் வாயிலாகத் தெளிவாக விளங்கச் செய்யும் சிறப்பையும், காட்டலாம்" என்கிறார் (தொல்காப்பியப் பூங்கா, ப.25). மேலும் அவர், இந்நூலினால் விளையும் பயன் குறித்துக் கூறுமிடத்து, "இதனைத் தொல்காப்பியத்தில் என்ன இருக்கிறது என எள்ளி ஒதுக்குவோரும், தொல்காப்பியம் எப்படி இருக்குமோ என அஞ்சி ஒதுங்குவோரும் கற்றால் அவர்தம் நிலை மாறித் தொல்காப்பியத்தைச் சுவைக்க முனைவர் என்பதில் அய்யமிராது" (மேலும். ப.31) என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து இந் நூலின் தன்மையை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

## உவமை - சொல் நயங்கள்

கலைஞரின் கவிதைப் புலமையைத் தமிழர்கள் யாவரும் நன்கு அறிவர். அவர் எழுதிய பிற நூல்களின் வழியாக அவரது மொழிப் புலமையும் இலக்கிய அறிவும் சிறந்து விளங்குவதைப் போலவே தொல் காப்பியப் பூங்காவிலும் அவர் கையாண் டுள்ள உவமை மற்றும் சொல் நயங்கள் வாசிப்பாளரை ஈர்க்கும் விதமாக அமைந்து ள்ளன.

'எழுத்து' என்னும் தலைப்பில் அமையப் பெற்ற உரை விளக்கத்தில், "இமைகள் மூடியிருந்தன எனினும்; நெடுநேரம் மழை நீரில் ஊறிய நெல்லுக்குள்ளிருந்து அரிசி தலை காட்டுவது போல வெள்ளை விழிகள் இமைகளின் இடுக்குகளில் ஒளிகாட்டிய வண்ணமிருந்தன" (மேலது., ப.41) என்று கலைஞர் கண்ணின் வெண்மையை நெல்லின் அரிசிக்கு உவமைப்படுத்திய பாங்கு சிறந்த அழகியலாகிறது.

ஆய்த எழுத்து தொல்காப்பியரிடம் பேசுவது போல் அமைந்த உரை ஒன்றில், "ஆமாம்! தாங்கள் எழுதிய முதல் நூற்பாவிலேயே எனக்கு இடம் கொடுத்து விட்டீர்களே; என் திறமையைப் பார்த்தீர்களா?" என்று ஆய்த எழுத்து மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. தொல்காப்பியர்; அவர் எழுதியதைத் திரும்பப் படித்துப் பார்த்தார்.

எழுத்தெனப் படுப

அகர முதல் னகர விறுவாய்

முப்பஃ தென்ப

சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே

(எழுத்ததிகாரம்-நூல் மரபு-1)

**"முப்பஃ தென்ப" என்னும் தொடரில் ஆய்த எழுத்து வந்து அமர்ந்து கொண்டதை அவரும் வியப்புடன் நோக்கி நிறைவான மகிழ்ச்சி கொண்டார்"** (மேலது,44) என்பதாக அமைத்துக்கொண்ட வரிகளில் சிறந்த சொல் நயம் மிளிர்கிறது.

மற்றொரு விளக்கத்தில், "என்ன இருந்தாலும் தமிழ் தந்த அருங் கொடையைப் பாருங்கள். 'அ' வை முதல் எழுத்தாகக் கொண்ட அண்ணா நமக்குத் தலைவர் - இன்றைக்குக் 'க' வை முதல் எழுத்தாகக் கொண்ட கலைஞர் கருணாநிதி நமக்குத் தலைவர்.

அய்யா! தமிழில் 'க்' என்ற மெய் எழுத்து தான் நான்! அத்துடன் 'அ' என்ற உயிர் எழுத்து சேர்ந்ததால்தான் 'க' என்ற உயிர்மெய் எழுத்து, என் பெயரில் முதலாக அமைந்தது. அதனால் புரிந்து கொள்ளுங்கள்; 'க்' எனும் மெய்யுடன் 'அ' எனும் உயிர் சேர்ந்தே கருணாநிதியாக இயங்குகிறது "(மேலது, பக்.53-54) என்று கலைஞர் என்னும் பெயருக்கு அவர் விளக்கம் தந்திருப்பது அவரது சொல் திறனிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகிறது.

## திராவிடக் கருத்தியல்

பெரியாரிய கொள்கையாளராக இறுதிவரை வாழ்ந்து மறைந்த கலைஞரின் எழுத்துகளி லும் அவர் ஏந்திய திராவிடக் கருத்துகள், சிந்தனைகள் வெளிப்படுவது இயல்பானதே ஆகும். அவ்வாறே, தொல்காப்பியப் பூங்காவி லும் அச்சிந்தனைகளைப் பல இடங்களில் காணமுடிகிறது. பேரறிஞர் அண்ணா மறைவின் போது கலைஞர் எழுதிய கவிதையை ஓரிடத்தில்,

**"நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்**
**நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாய்!**

நியாயந்தானா?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம்
முத்தல்ல;
நான் தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ?
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
(மேலது,52)

என்றவாறு எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், "துறவிகள் சிலர், துறவு இலக்கணத்தையே மறந்தும் துறந்தும் எவ்வளவோ காலமாகி றதே" (மேலது,ப.96) என்றும், "வறண்டு வளம் திரிந்துவிட்ட 'பாலை' நிலங்களுக்குத் தான் எந்தத் தெய்வமும் இல்லை என்பது, இந்தச் செய்யுளில் இருந்து தெரிகிறது. பாலை நிலத் தெய்வமாக வர யாரும் விரும்பவில்லை போலும்" (மேலது., ப.137) என்றும் தான் ஏற்ற பெரியாரியக் கொள்கைக் கருத்துகளை விளக்கிச் செல்கிறார்.

## மொழி நடையியல்

கலைஞரின் எழுத்து நடை குறித்துக் குறிப்பிடும் பேராசிரியர் க.அன்பழகன் கூற்றை இரா.ராமகிருட்டிணன், "மக்கள் படிக்க விரும்பும் எளிய நடையில், படிப்பவர் ஆர்வத்தை வளர்க்கும் சுவையான கதைக் குறிப்புகளுடனும், நினைவில் நிறுத்தத் துணையாகும் வரலாற்று விளக்கச் செய்திகளுடனும் இந்தப் பூங்காவை இயற்றியுள்ளார்" (உரையாசிரியர்களின் உரை வளம்-1, ப.97) என்றவாறு எடுத்துக்காட்டியுள்ளார். பெரும்பாலான நூற்பா விளக்கப் பகுதிகள் இருவருக்கான உரையாடல் நடையில் அமையப்பெற்றுள்ளன.

"உயிர் எழுத்துகளை எப்படி நினைவு
வைத்துக் கொள்கிறீர்கள்?"
"அய்யா நான் சொல்லட்டுமா?" எனக்
கேட்டான் மாணவன் மணிவாசகன்
சொல்லேன் பார்க்கலாம்' என்றார்,
ஆசிரியர்!
"பன்னிருகை முருகனை நினைவில்
வைத்துக்கொண்டு; உயிர் எழுத்துப்
பனிரெண்டு என்பதை உறுதிப்படுத்திக்
கொள்கிறேன்"

எனப் பதில் வந்தது (தொல்காப்பியப் பூங்கா, ப.46) இது ஆசிரியர் மாணவர் உரையாடல் நடையில் அமையப்பெற்றுள்ளது. இன்னும் பல நூற்பாக்களின் விளக்கங்கள் கதை வடிவத்தில் அமைந்துள்ளன.

"எட்டுச்சுவை
பிட்டுத் தமிழ்
கட்டித் தயிர்
வட்டில் நிறை
கொட்டித் தர
பட்டுக்கொடி
கொற்றக்குடை
மூவேந்தர் அவை
முத்தமிழ்ப் புலவர்
போற்றிய காப்பியர்
ஆற்றலைக் காண
அடுத்துத் தொடர்வோம்" (மேலது.,பக்.400-401)

இவ்வாறு சில நூற்பா விளக்கங்கள் கவிதை நடையிலும் அமைந்துள்ளமையைக் காணலாம்.

## விளக்கமுறைகள்

தொல்காப்பியச் நூற்பாக்களுக்கான கருத்து விளக்கங்கள் முந்தைய உரையாசிரியர்களின் மரபிலிருந்து சற்று மாறுபட்டு அமைந்துள்ள மையைக் கலைஞரின் உரைவழியாகக் கண்டுணரலாம். "இனத்துக்கு ஓர் எழுத்து இணைந்து "தமிழ்" உருவாகியிருக்கும்போது; ஏற்கனவே உருவான தமிழர் இனம் ஏன் சிதைந்து சிதறவேண்டும்?" (மேலது., ப.65) என்பதைக் கருத்து விளக்கத்திற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

"அகராதியில் 'அங்கதம்' என்ற சொல்லுக்கு, மார்பு - தோளணி - பழிச்சொல் - பாம்பு - பொய்-யானையின் உணவு எனப் பல பொருள் உண்டு. அஃதே போல் 'மானம்' என்பதற்கு, தன் மதிப்பு, அகங்காரம், வலி, குற்றம், நேசம், அன்பு, கற்பு எனப் பொருள்கள் கொள்ளலாம். சாரியை எனும் இலக்கணச் சொல்லுக்குச் சார்ந்து வரும் இடைச் சொல் என்பது மட்டுமன்றிப் 'புறக்கூத்துக்குரிய' ஆடல் எனும் பொருளும் உண்டு" (மேலது.,ப.78) ஆகிய புதிய விளக்கங்களை உடையனவாகவும் விளங்குகின்றன.

முந்தையோர் முறையைப் போல ஏற்ற இடங்களில் சங்கப் பாடல்களைச் சான்றுகளாக எடுத்துக்காட்டியும் அப்பாடல்களுக்கான விளக்கங்களை எடுத்துக்கூறியும் கலைஞர் விளக்கிச் செல்கிறார். மேலும், நினைத்தவாறு பல சான்றுகளையும் பொருத்தமுடன் கூறும் பாங்கு இவருக்கு இயல்பாய் அமைந்துள்ளது. ஆதலால் தான் தொல்காப்பியப் பூங்காவில் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டு கூறும்போது கூட வரலாற்றுச் செய்திகளைப் படிப்போர் வியக்கும் வண்ணம் எழுதியுள்ளார் (இரா.இராமகிருட்டிணன், உரையாசிரியர் களின் உரை வளம்-1, ப.100).

சில நூற்பா விளக்கங்களுக்குத் தேவையான இடங்களில் பிற தமிழறிஞர்களின்

கருத்துகளைக் குறிப்பு என்ற பெயரில் அங்கு விளக்கிச் செல்கிற பாங்கினைக் கலைஞரது உரையில் காணலாம். குறிப்பாக 'அய்யர்' என்னும் சொல்லுக்கு வெள்ளைவாரணனார் (தொல்காப்பியப் பூங்கா, பக்.306-307) தருகிற விளக்கத்தைத் தந்திருப்பதைக் குறிப்பிடலாம்.

## பிறதுறைப் புலமை

கலைஞர் கலை, இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் மட்டுமல்லாமல் அரசியல், கோட்பாடுகள் மற்றும் அறிவியல் போன்ற பிற துறைகளிலும் புலமை மிக்கவராக இருந்துள்ளமையை அவரது உரை வெளிப்படுத்துகிறது.

"இரண்டாம் உலகப் போர் நடந்த போது அமெரிக்காவைச் சார்ந்து சில நாடுகளும், இட்லரின் ஜெர்மனியைச் சார்ந்து சில நாடுகளும் போரில் ஈடுபட நேரிட்டது. இருபுறமும் தலையாய நாடுகளாக இறுதி முடிவெடுக்கும் செல்வாக்குடன் இருந்த நாடுகளைச் சார்ந்துதான் நேசநாடுகளின் வரிசையும், அச்சு நாடுகளின் வரிசையும் அமைந்தன என்பதை கடந்த கால வரலாறு மறக்காது" (மேலது., ப.90) என ஓரிடத்தில் கடந்த கால உலக அரசியல் குறித்துப் பேசுகிறார். இதனைச் சார்பெழுத்துகள் குறித்து விளங்குங்கால் விவாதித்துள்ளார். இதனை, "அந்த அணிகளில் இடம் பெற்றாக வேண்டிய அவசியமும் கட்டாயமும், தமக்கெனத் தனித்தன்மையே இல்லாத, சார்ந்து மட்டுமே இருக்கக்கூடிய நிலை இயக்கங்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. அந்த இயக்கங்களின் நிலைமைதான் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று எழுத்துக்களுக்கும் அமைந்துள்ளது என்பது தெளிவான உண்மையாகும்" என்று கலைஞர் எழுதுவதாக இரா.இராமகிருட்டிணன் (உரையாசிரியர்களின் உரை வளம்-1, ப.99) குறிப்பிடுகிறார்.

பாரதப் போரில் அரவானைக் களப்பலி கொடுத்து போர் தொடங்குவதாகவும், அவன் இறந்தவுடன் மஞ்சள், குங்குமம், மாங்கல்யம் இழப்பதற்காகவே அந்த விழாவில் அலிகள் கலந்து கொண்டு மாரடித்து அழுது புலம்பி மாங்கல்யம் அறுப்பது என்பது ஓர் அய்தீகம் (தொல்காப்பியப் பூங்கா, ப.116) என்று தொன்மக் கதையாடலுடன் நடப்பியல் குறித்தும் பேசுகிறார்.

டார்வின் சித்தாந்தம், குரங்கிலிருந்து மனிதன் தோன்றிய விதம் பற்றி அறிவியல் ரீதியில் விளக்கி வெற்றி கண்டிருக்கிறது. உலகில் பரிணாம வளர்ச்சி காரணமாக பல்கிப் பெருகிய மனித சமுதாயத்தில் ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, முறையான வாழ்வுக்கு மெல்ல மெல்லத் தயாராகிக் கொண்டது தமிழ் இனம் (மேலது.,ப.134) என்று அறிவியல் கருத்துகளையும் குறித்துச் செல்கிறார்.

## முடிவுரை

நாடகம், நாவல், சிறுகதை, திரைப்பட வசனங்கள், திருக்குறள் உரை, சங்கத் தமிழ் உரை எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களிலும் மிகுந்த தேர்ச்சிப் பெற்ற தமிழறிஞர் கலைஞர் அவர்களது தொல்காப்பிய உரை வடிவம் பிற இலக்கிய ஆக்கங்களிலிருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளது. மரபு வயப்பட்ட உரைத் தன்மையிலிருந்து மாறிய கவித்துவமான மாற்று வடிவத்தைத் தொல்காப்பியப் பூங்கா கொண்டுள்ளது. உவமைகளும் சொல் நயங்களும் வரிகள்தோறும் குவிந்துள்ளன. கலைஞர் தான் ஏற்றுக்கொண்ட கொள்கைக் கருத்துகளையும் இடையிடையே ஏற்றிச் செல்வதைக் காணமுடிகிறது. உரையாடல், கதையாடல், கவியாடல் என நடையியல் கூறுகள் இவ்வுரையில் மிகுந்துள்ளன. கலைஞரது பிறதுறைப் புலமையை இதன்வழி கண்டுணரலாம். பிற்காலத் தொல்காப்பிய உரையாக்க மரபுகளிலிருந்து தனித்துச் சுட்டத்தக்க வண்ணம் தொல்காப்பியப் பூங்கா அமைந்துள்ளது.

## துணைநூற் பட்டியல்

1. இராமகிருட்டிணன் இரா., உரையாசிரியர்களின் உரை வளம்-1, சாரதா
2. பதிப்பகம், சென்னை-14, 2020.
3. இளங்குமரனார் இரா., இலக்கண உரையாசிரியர்கள் தொல்காப்பியம்,
4. நான்காம் தமிழ்ச் சங்கம், மதுரை, 2019.
5. கருணாநிதி மு., தொல்காப்பியப் பூங்கா, பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை, சென்னை - 600 108, 2015.
6. மதுகேசுவரன் பா., தொல்காப்பியப் பதிப்பு ஆவணம், முனைவர் ந.ஆனந்தி வெளியீடு, வேலூர் - 632 311, 2010.